சுருக்கம்

சென்னை மாநகராட்சி – தொழிற் பயிற்சி நிலைய மாணவர்களுக்கு மாநகர போக்குவரத்துக் கழக பேருந்தில் இலவச பயண சலுகை வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.1) துறை

அரசாணை (நிலை) எண்.17 நாள்.31.01.2014

தை:– 18

விஜய

திருவள்ளுவர் ஆண்டு, 2045

படிக்க:–

1. அரசாணை (நிலை) எண்.55, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 26.04.1999.
2. மத்திய அரசின் தேசிய வாழ்வியல் பயிற்சி முறை அங்கீகாரம் (DGET-NCVT) எண். DGET/6/22/6/2006/TC/ நாள்.20.03.2007, 28.03.2008, 24.06.2009 மற்றும் 15.06.2010.
3. அரசாணை (நிலை) எண்.88, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 06.05.2010.
4. அரசாணை (நிலை) எண்.53, போக்குவரத்து (B.1) துறை, நாள் 29.05.2003.
5. அரசாணை (நிலை) எண்.57, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 05.04.2010.
6. அரசாணை (நிலை) எண்.292, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள் 06.08.2004.
7. முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர், சென்னை மாநகராட்சி அவர்களின் கடிதம் க.து.ந.க.எண்.தொ.ப.நி/067/2011, நாள் 02.07.2013 மற்றும் 10.05.2013.

*************

ஆணை

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி சென்னை மாநகராட்சி கல்வித்துறையில் தொழில் பயிற்சி நிலையம் மத்திய அரசின் தேசிய வாழ்வியல் பயிற்சி முறை (NCVT) அங்கீகாரத்துடன் ஆகஸ்ட், 2007 கல்வி ஆண்டு முதல் தொழில் பயிற்சி நிலையம் நடைபெற்று வருகின்றது. சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு 80% மற்றும் மாநகராட்சி ஊழியர்களின் குழந்தைகளுக்கு 20% சேர்க்கை அளிக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட மத்திய அரசின் கடிதத்தின்படி ஆறு வகையான பாடப் பிரிவுக்கும் தேசிய வாழ்வியல் பயிற்சி முறை (National Council for Vocational Training) மூலம் அங்கீகாரம் பெறப்பட்டு ஒவ்வொரு பாட பிரிவிலும் கீழ்காணும் எண்ணிக்கையில் மாணவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

| வ எண் | பாடப் பிரிவு | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கணினி இயக்குபவர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர் | 22 + 22 = 44 |
| 2 | குழாய் பொருத்துநர் | 21 + 21 = 42 |
| 3 | பிட்டர் | 21 + 21 = 42 |
| 4 | கம்மியர் (மோட்டார் வாகனம்) | 21 + 21 = 42 |
| 5 | மின் பணியாளர் | 21 + 21 = 42 |
| 6 | மின்னணுவியல் | 21 + 21 = 42 |
| | **மொத்தம்** | **254** |

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி சென்னை மாநகராட்சி பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கும் மற்றும் மாநகராட்சி ஊழியர்களின் குழந்தைகளுக்கும், மாணவர்கள் சேர்க்கையில் முன்னுரிமை அளித்தும், மீதம் காலியாக உள்ள இடங்களுக்கு சென்னை மாவட்டத்தில் பிற பள்ளிகளில் படித்த, சமுதாயத்தில் பின்தங்கிய ஏழை எளிய மாணவர்களை அவ்வப்போது அரசால் வெளியிடப்படும் இன இட ஒதுக்கீடு ஆணைகளைப் பின்பற்றி சேர்க்கை அளிக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

4. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலைய மாணவர்களுக்கு வீட்டில் இருந்து தொழிற் பயிற்சி நிலையம் வரை சென்று வர 50% பயண கட்டணத்துடன் பயணம் செய்து வர சலுகை பெற்று வந்தனர்.

5. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் வீட்டில் இருந்து தொழிற் பயிற்சி நிலையம் வரை சென்று வர இலவச பேருந்து பயண சலுகையினை வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில் அரசு தொழிற் பயிற்சி நிலைய விதிகளை பின்பற்றி சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிய ஏழை எளிய மாணவர்களுக்கு சேர்க்கை அளிக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது.

6. எனவே, மேலே ஏழாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர், சென்னை மாநகராட்சி அவர்கள் சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி பெறும் மாணவர்களின் நிலையை கருத்தில் கொண்டு அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு மாநகர பேருந்தில் முழுமையான இலவச பேருந்து பயண சலுகை வழங்கியதை போல சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலைய மாணவர்களுக்கும் மாநகர பேருந்தில் இலவச பேருந்து பயண சலுகையினை வழங்க கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்து அரசின் ஆணையினை கோரியுள்ளார்:–

- சென்னை மாநகராட்சி கல்வித் துறையின் கீழ் இயங்கும் தொழிற் பயிற்சி நிலைய மாணவர்களுக்கும் மாநகர பேருந்தில் பயணிக்க இலவச பேருந்து பயண சலுகையினை வழங்க போக்குவரத்துத் துறையிடம் கோரப்பட்டது. இதற்கு, வேலை வாய்ப்பு மற்றும் தொழிற் பயிற்சி துறை இயக்குநர் அவர்கள், தனியார் தொழிற் பயிற்சி நிலையமாக கருதப்படும் சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் சமுதாயத்தில் பின்தங்கிய ஏழை எளிய மாணவர்கள் பயன்பெறும் வகையில் மாநகர பேருந்தில் பயணிக்க 50% பயணக் கட்டண சலுகை வழங்கப்பட்டுள்ளதைப் போல் இலவச

பேருந்து சலுகையாக மாற்றி வழங்குவதால் ஏற்படும் செலவினத்தை மாநகராட்சியே ஏற்கும் பட்சத்தில் இலவச பேருந்து பயண சலுகை வழங்கலாம் என தெரிவித்துள்ளார்.

- அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு முழுமையான இலவச பேருந்து பயண சலுகை வழங்கிய வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் அரசாணை (நிலை) எண்.57 தொழிலாளர் (ம) வேலை வாய்ப்பு (எஸ்.1) துறை நாள்.05.04.2010–ன்படி, 21,322 மாணவர்களுக்கு ஆகும் செலவினம் ரூ.3.84 கோடி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி உத்தேசமாக ஒரு மாணவருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.1,800/– அரசுக்கு செலவினம் ஆகிறது. சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலைய மாணவர்களுக்கு இலவச பேருந்து பயண சலுகை வழங்க அரசுக்கு ஏற்படும் செலவினத்தை மாநகராட்சியே ஏற்கும் பட்சத்தில் தேசிய வாழ்வியல் பயிற்சி முறை அங்கீகாரத்தின்படி (NCVT) 250 மாணவர்களுக்கும், நபருக்கு ரூ.1800/– வீதம் ஆகும் மொத்த செலவினம் ரூ.4.5 இலட்சம் ஆகும்.
- சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலைய பணியாளர்கள் தேர்வு மற்றும் செலவீனம் குறித்த அரசாணை (நிலை) எண்.292 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்.06.08.2004–ற்கு, "தொழிற் பயிற்சி நிலையத்தின் மொத்த செலவினங்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஊதிய ஒப்பந்த அடிப்படையில் தொகுப்பூதியமாக வழங்குவதற்கு பதிலாக காலமுறை ஊதியமாக அரசு விதிகளின்படி சென்னை மாநகராட்சி நிதியில் இருந்து வழங்கப்படும்" என்ற திருத்தம் அரசு கடிதம் எண் 36789/மா.ந.3/2007–1, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்.06.11.2008–ல் வழங்கப்பட்டுள்ளது.
- மேற்கண்டுள்ளவாறு சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தின் பணியாளர்கள் ஊதியம், பயிற்சி பாடப் பிரிவுகளுக்குத் தேவையான செய்முறை கருவிகள் மற்றும் உபகரணங்கள் நாள்தோறும் செய்முறை பயிற்சிக்கு தேவையான நுகர்பொருட்கள் மற்றும் பயிற்சி மாணவர்களுக்கு கடந்த ஆண்டு முதல் முற்றிலும் கட்டணம் இன்றி பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்துடன் கடந்த வருடம் முதல் வருடத்திற்கு ஒரு முறை விலையில்லா சீருடை பயிற்சி மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.
- இச்செலவினங்களைப் போன்று சென்னை மாநகராட்சி கல்வித் துறையின் கீழ் இயங்கும் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிலும் ஏழை எளிய மாணவர்கள் பயன் பெறும் வகையில் இலவச பேருந்து பயணத்திற்கு தேசிய வாழ்வியல் பயிற்சி முறை (NCVT) அங்கீகாரத்தின்படி சேர்க்கை செய்யும் மாணவர்களுக்கு ஆகும் செலவினத்தை சென்னை மாநகராட்சி நிதியில் மேற்கொள்ளலாம் என்ற கருத்தைத் தெரிவித்து அரசுக்குக் கடிதம் அனுப்ப நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (விரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மாமன்றத்தின் தீர்மானம் எண்.198/2013, நாள்.26.04.2013–ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

7. மேற்கூறிய சூழ்நிலையில், முதன்மைச் செயலாளர் / ஆணையர், சென்னை மாநகராட்சி அவர்களின் செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலனை செய்தபின், அதனை ஏற்று சென்னை மாநகராட்சிக்கு கீழ்க்கண்ட அனுமதிகளை அளித்து அரசு ஆணையிடுகிறது:

1. சென்னை மாநகராட்சி கல்வித் துறையின் கீழ் இயங்கும் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிலும் ஏழை எளிய மாணவர்கள் பயன் பெறும் வகையில் தேசிய வாழ்வியல் பயிற்சி முறை (National Council for Vocational Training) அங்கீகாரத்தின்படி சேர்க்கை செய்யும் மாணவர்களுக்கு அவர்களது வீட்டிலிருந்து தொழிற் பயிற்சி நிலையம் வரை சென்று வர இலவசப் பேருந்து பயணச் சலுகையினை வழங்கலாம். மேலும், குடியரசு தினவிழா மற்றும் சுதந்திர

தினவிழா ஆகியவற்றைத் தவிர மற்ற விடுமுறை நாட்களில் இந்த இலவச பயணச் சலுகையைப் பயன்படுத்தக்கூடாது என்ற நிபந்தனையுடன் வழங்கலாம்.

2. இதற்கான கட்டணம் கீழ்க்கண்ட வகைப்பாட்டின்படி ஈடு செய்யப்படுகிறது (Reimbursement).

- 50% பயண கட்டணத்தை, மாநகரப் போக்குவரத்து கழகத்திற்கு அரசு ஈடு செய்ய வேண்டும்.
- மீதமுள்ள 50% பயண கட்டணத்தை சென்னை மாநகராட்சியால் தனது பொது நிதியிலிருந்து ஈடு செய்யப்பட வேண்டும். இதற்கு மாநகர் போக்குவரத்து கழகம், 50% பயண கட்டண தொகை விவரத்தை (Actual Claim) வருடந்தோரும் சென்னை மாநகராட்சிக்கு நேரடியாக அனுப்பி வைக்க வேண்டும். சென்னை மாநகராட்சி கேட்கப்பட்ட கட்டணம் முழுவதையும் மாநகர போக்குவரத்து கழகத்திற்கு செலுத்த வேண்டும்.

8. இவ்வாணை போக்குவரத்து மற்றும் நிதித் துறைகளின் அ.சா.கு.எண் முறையே.19069/பி.1/2013, நாள்.02.01.2014 மற்றும் அ.சா.கு.எண். 1945/நிதி (நநிகுவ)/2014, நாள்.28.01.2014–ல் பெறப்பட்ட இசைவுகளுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

க. பணீந்திர ரெட்டி
செயலாளர்

பெறுநர்
முதன்மைச் செயலாளர் / ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 600 003.
செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை – 600 009.
முதன்மைச் செயலாளர், போக்குவரத்துத்துறை, சென்னை – 600 009.
மேலாண்மை இயக்குநர், மாநகர போக்குவரத்துக் கழகம், சென்னை– 600 002.
முதன்மைச் செயலாளர், நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
மாநிலக் கணக்காயர், சென்னை– 18 / 35.
இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, சென்னை – 600 108.
நகல்:–
மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை – 600 009.
நிதி (நநிகுவ) துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
செயலாளர் அவர்களின் முதன்மைத் தனிச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சென்னை – 600 009
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந.2) துறை, சென்னை – 600 009.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

31/1/2014

பிரிவு அலுவலர்

31/1/14